**ஜனவரி – 10**


# TNPSC துளிகள்

- விசாகா உத்சவம் என்பது ஆந்திரப் பிரதேச மாநில சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் மற்றும் விசாகப் பட்டின பெருநகரப் பகுதி வளர்ச்சி ஆணையம் ஆகியவற்றினால் விசாகப் பட்டினத்தில் நடத்தப்படும் ஒரு வருடாந்திர சுற்றுலா நிகழ்வாகும்.
- குஜராத் மாநில முதல்வரான விஜய் ரூபானி அகமதாபாத்தில் 31வது சர்வதேச காற்றாடித் திருவிழாவைத் தொடங்கி வைத்துள்ளார்.
- அமெரிக்காவின் பல்கலைக்கழக விண்வெளி ஆராய்ச்சிச் சங்கத்தின் (Universities Space Research Association - USRA) தலைமையிலான ஒரு புதிய ஆராய்ச்சியானது பூமியின் சகோதரி கிரகமான வெள்ளிக் கிரகத்தில் செயல்பாட்டில் உள்ள எரிமலைகள் (உயிர்ப்புள்ள) இருப்பதைக் கண்டறிந்துள்ளது.
- “எபிபானி” என்ற ஒரு கிறித்துவத் திருவிழாவானது கோவா மற்றும் கேரளா ஆகிய இந்திய மாநிலங்களின் சில பகுதிகளில் கொண்டாடப்பட்டது.
  - கோவாவில் இந்தக் கொண்டாட்டமானது அதன் போர்ச்சுக்கீசியப் பெயரான ‘ஃபெஸ்டா டோஸ் ரெய்ஸ்’ என்ற பெயரிலும் கேரளாவின் சில பகுதிகளில் அதன் சிரியப் பெயரான ‘டென்ஹா’ என்ற பெயரிலும் அறியப்படுகின்றது.

# தமிழ்நாடு செய்திகள்

## தீவிரப்படுத்தப்பட்ட போலியோ நோய் எதிர்ப்புத் திறனூட்டல் பிரச்சாரம் - தமிழ்நாடு

- ஜனவரி 19 ஆம் தேதியன்று தீவிரப்படுத்தப்பட்ட போலியோ நோய் எதிர்ப்புத் திறனூட்டல் பிரச்சாரத்தின் ஒரே சுற்றில் 0 முதல் 5 வயதுக்குட்பட்ட 70.50 லட்சம் குழந்தைகளுக்குப் போலியோ தடுப்பு மருந்து வழங்க தமிழகப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருத்துவ இயக்குநரகம் இலக்கு நிர்ணயித்துள்ளது.




- இந்த ஆண்டு, போலியோ நோய் இல்லாத 16வது ஆண்டில் தமிழகம் நுழைந்துள்ளது.

- மாநிலத்தின் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுச் சேவை மையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிகள் மற்றும் பிற முக்கிய இடங்களில் போலியோ தடுப்பு மருந்து மையங்கள் அமைக்கப்பட இருக்கின்றன.

# தேசியச் செய்திகள்

## IMDன் காலநிலை குறித்த அறிக்கை 2019

- இந்திய வானிலை ஆய்வு மையமானது (India Meteorological Department - IMD) 2019 ஆம் ஆண்டின் காலநிலை அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- கடந்த பத்தாண்டுகள் இந்தியாவைப் பொறுத்த வரையில் மிகவும் வெப்பமான ஆண்டுகளாக இருந்துள்ளன.
- 1901 ஆம் ஆண்டிலிருந்து, 2019 ஆம் ஆண்டானது ஏழாவது வெப்பமான ஆண்டாக இருந்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டின் வருடாந்திர மழைப் பொழிவானது 1961 – 2010 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தின் நீண்ட கால சராசரியில் 109% ஆக இருந்தது.
- 1902 ஆம் ஆண்டிலிருந்து, 2019 ஆம் ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான சூறாவளிகள் அரேபியக் கடலில் உருவாகியுள்ளன. அரேபியக் கடலில் இருந்து இந்த ஆண்டு ஐந்து சூறாவளிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- சராசரியாக இங்கு ஒரு ஆண்டில் உருவாகும் சூறாவளிகளின் எண்ணிக்கை ஒன்று ஆகும்.
- இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிடையே தீவிர வானிலை நிகழ்வுகளால் ஏற்படும் அதிக இறப்புகள் பீகார் மாநிலத்தில் (650) பதிவாகியுள்ளன.
- 1902 ஆம் ஆண்டிலிருந்து, இந்த ஆண்டில் புது தில்லியானது மிக நீண்ட குளிர் காலத்தை (18 நாட்கள்) பதிவு செய்துள்ளது.

## மேற்கு மண்டல ஆணையம்

- மேற்கு மண்டல ஆணையத்தின் 25வது கூட்டமானது 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மத்திய உள்துறை அமைச்சரின் தலைமையில் நடைபெற இருக்கின்றது.
- இந்தக் கூட்டத்தின் இணைத் தலைவராக மகாராஷ்டிரா மாநில முதல்வர் செயல்படுவார். இந்தக் கூட்டத்தை மகாராஷ்டிரா மாநிலம் ஒருங்கிணைக்கின்றது.
- இது நிகழ்நேரத்தில் பெண்களின் பாதுகாப்பிற்கான ஒரு செயல் திட்டத்தையும் இணைய அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளையும் வழங்க இருக்கின்றது.
- இந்த ஆணையத்தின் 24வது கூட்டமானது 2019 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் கோவாவில் நடத்தப்பட்டது.
- மத்திய உள்துறை அமைச்சகத்தின் மாநிலங்களுக்கிடையேயான ஆணையச் செயலகத்தின் கீழ் மேற்கு மண்டல ஆணையமானது செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது.
- இது கோவா, குஜராத், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களையும் டாமன் & டையூ மற்றும் தாத்ரா & நாகர் ஹவேலி என்ற ஒன்றியப் பிரதேசத்தையும் உள்ளடக்கியுள்ளது.

*மண்டல ஆணையம்*

- மண்டல ஆணையங்கள் ஆனது ஒரு சட்டரீதியான (அரசியலமைப்பு சார்ந்தது அல்ல) அமைப்புகளாகும்.
- இவை 1956 ஆம் ஆண்டின் மாநில மறுசீரமைப்புச் சட்டத்தால் நிறுவப்பட்டுள்ளன.
- இந்தச் சட்டமானது இந்தியாவை ஐந்து மண்டலங்களாக (வடக்கு, மத்திய, கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு) பிரித்து, ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு மண்டல ஆணையத்தை ஏற்படுத்தியுள்ளது.

## சரக்கு மற்றும் சேவைகள் வரி குறித்த 2வது தேசிய மாநாடானது

- மாநில வரி ஆணையர்கள் மற்றும் மத்திய வரி தலைமை ஆணையர்கள் ஆகியோரின் சரக்கு மற்றும் சேவைகள் வரி குறித்த 2வது தேசிய மாநாடானது புதுதில்லியில் நடத்தப் பட்டது.
- இந்த மாநாடானது மத்திய நிதித் துறை அமைச்சகத்தின் வருவாய்ச் செயலாளரான டாக்டர் அஜய் பூஷன் பாண்டே தலைமையில் நடைபெற்றது.
- சரக்கு மற்றும் சேவை வரி முறையைச் சீராக்குவதற்காகவும் வருவாய்க் கசிவுகளை கட்டுப்படுத்துவதற்காகவும் இந்த மாநாடு நடத்தப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## துருவ அறிவியல் ஒத்துழைப்பு

- இந்தியாவின் மத்திய புவி அறிவியல் துறை அமைச்சகம் மற்றும் சுவீடனின் கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சகம் ஆகியவை துருவ அறிவியல் துறையில் ஒத்துழைப்பு தொடர்பான ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது இந்த இரு நாடுகளின் முதலாவது கடல்சார் ஒத்துழைப்பு ஒப்பந்தமாகும்.
- இந்த ஒப்பந்தமானது சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பாக ஆர்க்டிக் மற்றும் அண்டார்டிக் பிராந்தியங்களில் உள்ள நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பையும் உள்ளடக்கியுள்ளதால் இதற்கு துருவ அறிவியல் என்று பெயர்.
- ஆர்க்டிக் ஆணையத்தில் உள்ள எட்டு உறுப்பு நாடுகளில் ஸ்வீடனும் ஒன்றாகும். அதே சமயத்தில் ஆர்க்டிக் ஆணையத்தில் இந்தியா பார்வையாளர் நிலையைக் கொண்டுள்ளது.
- இதே போல் இந்தியாவும் துருவப் பிராந்தியங்களிலும் கடல் பகுதியிலும் அறிவியல் ஆராய்ச்சித் திட்டங்களைத் நடத்திக் கொண்டிருக்கின்றது.

## இடப்பெயர்வு மற்றும் இயக்கக் கூட்டு ஒப்பந்தம்

- இந்தியாவிற்கும் பிரான்சிற்கும் இடையிலான இடப்பெயர்வு மற்றும் இயக்கக் கூட்டு ஒப்பந்தத்தை அங்கீகரிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த ஒப்பந்தமானது மக்கள் - மக்கள் தொடர்புகள், மாணவர்கள், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் திறமையான நிபுணர்களின் இடப்பெயர்வை (இயக்கம் – ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு செல்லுதல்) மேம்படுத்துகின்றது.
- இது இரு நாடுகளுக்கிடையே ஒழுங்கற்ற இடப்பெயர்வு மற்றும் ஆள் கடத்தல் தொடர்பான பிரச்சினைகள் ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை

நோக்கமாகக் கொண்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## எந்திரமயமாக்கத்தின் தாக்கம் – அந்நிய நேரடி முதலீடு

- எந்திரமயமாக்கத்தின் காரணமாக உலகில் அந்நிய நேரடி முதலீடானது (Foreign Direct Investment - FDI) எவ்வாறு பாதிக்கப்பட்டு இருக்கின்றது என்பது குறித்து உலக வங்கி தனது ஆய்வை வெளியிட்டுள்ளது.
- எந்திரமயமாக்கமானது செல்வம் மிக்க நாடுகளிலிருந்து ஏழை நாடுகளுக்கு மூலதன ஓட்டத்தைச் சீர்குலைக்கும் என்று இந்த ஆய்வு முடிவு செய்துள்ளது.
- இந்த ஆய்வானது 2004 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் அந்நிய நேரடி முதலீடு மற்றும் தொழில்துறை ரோபோ (இயந்திர மனிதன்) பயன்பாடுகள் ஆகியவற்றின் தரவைப் பயன்படுத்தியுள்ளது.

## 2019 - 2020 ஆம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி

- மத்தியப் புள்ளிவிவர அமைச்சகத்தின் தேசியப் புள்ளிவிவர அலுவலகமானது (National Statistical Office - NSO) தேசிய வருமானத்தின் முதலாவது முன்கூட்டிய மதிப்பீடுகளை வெளியிட்டுள்ளது.
- இதன்படி, 2019 - 20 நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது 5% ஆக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது. இது கடந்த ஆண்டில் 6.8% ஆக இருந்தது.
- முந்தைய ஆண்டில் 2.9% ஆக இருந்த விவசாயத் துறையின் வளர்ச்சி விகிதமானது இந்த ஆண்டில் 2.8% ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- 2019 - 20 ஆம் ஆண்டில் தனிநபர் வருமானத்தின் வளர்ச்சி விகிதமானது 4.3% ஆக இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது தனது அக்டோபர் மாதக் கொள்கையில் 2019-20 ஆம் ஆண்டிற்கான வளர்ச்சி விகிதத்தை 6.1 சதவீதமாக இருக்கும் என நிர்ணயித்திருந்தது. ஆனால் அது 2019 - 20 ஆம் ஆண்டிற்கான தனது டிசம்பர் மாதக் கொள்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியை 5 சதவீதமாக மாற்றியமைத்துள்ளது.


# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## எவாலி (EVALI)

- எவாலியுடன் தொடர்புடைய முதலாவது இறப்பை அமெரிக்காவில் உள்ள கால்வெஸ்டன் மன்றமானது உறுதிப்படுத்தியுள்ளது.
- இதன் சுருக்கம் இ - சிகரெட் அல்லது உறிஞ்சுதல், அதனோடு தொடர்புடைய நுரையீரல் பாதிப்பு (EVALI - E-cigarette, or Vaping, Associated Lung Injury) என்பதாகும்.
- உறிஞ்சுதலுடன் இணைக்கப்பட்ட ஆபத்தான, புதிதாக அடையாளம் காணப்பட்ட நுரையீரல் நோய்க்கான நோய்க் கட்டுப்பாடு மற்றும் நோய்த் தடுப்பு மையத்தினால் (Centres for Disease Control and Prevention - CDC) எவாலி என்ற பெயர் அதற்கு வழங்கப் பட்டுள்ளது.
- CDC மற்றும் உணவு & மருந்து நிர்வாகத் துறை அதிகாரிகள் டெட்ராஹைட்ரோ

கன்னாபினோல் அல்லது டி.எச்.சி ஆகியவற்றைக் கொண்ட மின் - சிகரெட் அல்லது உறிஞ்சு சிகரெட் தயாரிப்புகளைத் தவிர்க்குமாறு அனைவரையும் வலியுறுத்தி உள்ளனர்.

- THC என்பது கஞ்சாவிலிருந்துப் பெறப்பட்ட, அதிக தூண்டும் தன்மை கொண்ட ஒரு இரசாயனமாகும்.





## நியான் - உலகின் முதலாவது செயற்கை மனிதன்

- சாம்சங் நிறுவனத்தினால் ஆதரிக்கப்படும் ஸ்டார் லேப்ஸ் என்ற ஒரு நிறுவனமானது “நியான்” என்ற உலகின் முதலாவது “செயற்கை மனிதனை” வெளியிட்டுள்ளது.
- நியான் என்பது ஒரு மனித வகையைச் சேர்ந்த செயற்கை நுண்ணறிவு உரையாடு தளமாகும்.
- இது AI உடன் சேர்ந்து ஒரு தனிப்பட்ட அனுபவத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது உணர்ச்சிகளையும் புத்திசாலித்தனத்தையும் காட்டும் திறன் பெற்று விளங்குகின்றது.



## உயிர் வாழத் தகுந்த மண்டலம் - பூமி போன்ற பெரிய அளவிலான கிரகம்

- வெளிக்கோள்களை ஆராய்வதற்காக செலுத்தப்பட்ட ஒரு ஆய்வு செயற்கைக்கோள் (Transiting Exoplanet Survey Satellite - TESS) ஆனது உயிர் வாழத் தகுதியுள்ள பூமி போன்ற அளவிலான "TOI 700 d" என்ற ஒரு கிரகத்தைக் கண்டுபிடித்துள்ளது.
- பூமி போன்ற அளவிலான இந்த கிரகமானது டொராடோ விண்மீன் தொகுப்பில் அமைந்துள்ளது.




***உயிர் வாழத் தகுந்த மண்டலம்:***


- உயிர் வாழத் தகுந்த மண்டலமானது வாழ்தகமைப் பிரதேசம் அல்லது நட்சத்திரத்தைச் சுற்றியுள்ள உயிர் வாழத் தகுந்த மண்டலம் (CHZ) என அழைக்கப் படுகின்றது.
- உயிர் வாழத் தகுந்த மண்டலம் என்பது மிகவும் வெப்பமாகவும் அதிக குளிராகவும் இல்லாத ஒரு நட்சத்திரத்தைச் சுற்றியுள்ள பகுதியாகும்.
- நமது பூமியானது சூரியனின் உயிர் வாழத் தகுந்த மண்டலத்தில் உள்ளது.

***Transiting Exoplanet Survey Satellite (TESS)***

- இது 2018 ஆம் ஆண்டில் நாசாவால் செலுத்தப்பட்ட ஒரு வான் ஆய்வுத் திட்டமாகும்.
- பூமிக்கு அருகிலுள்ள பிரகாசமான நட்சத்திரங்களைச் சுற்றியுள்ள வெளிக் கிரகங்களைக் கண்டறிய இது முயல்கின்றது.

## லித்தியம் சல்பர் மின்கலன்

- உலகின் மிகவும் திறனுள்ள லித்தியம் – சல்பர் மின்கலனை (lithium-sulfur - Li-S) உருவாக்கியுள்ளதாக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.
- இது தொடர்ச்சியாக ஐந்து நாட்களுக்கு ஒரு திறன்பேசியை இயக்கும் திறன் கொண்டது. இந்த மின்கலத்தின் மூலம் ஒரு மின்சார மகிழுந்தை 1,000 கி.மீ தூரத்திற்குச் செலுத்த முடியும்.




- Li-S மின்கலன்களின் குறைந்த உற்பத்தி செலவு, ஆற்றல் திறன் மற்றும் மேம்பட்ட பாதுகாப்பு ஆகியவற்றின் காரணமாக லித்தியம் அயன் (லி-அயன்) மின்கலன்களுக்கு அடுத்த வந்த மின்கலன்களாக இவை கருதப்படுகின்றன.
- சல்பர் அதிக அளவு கிடைப்பதால் இந்த வகை மின்கலன்களின் உற்பத்திச் செலவு மிகவும் குறைவாக உள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★